Registered as a Newspaper
பக்கங்கள் – 12
விலை – ரூபா 50
# உதயன்
சுடர் : 39
கதிர் : 334
வெள்ளிக்கிழமை
25 ஒக்ரோபர் 2024

முச்சந்தி முரளி



"இருக்கிற பிரச்சினையள் பத்தாதெண்டு இந்த எலிக்காய்ச்சல் வேற வந்திட்டுதோ?"



# எலிக் காய்ச்சலால் யாழில் ஒருவர் பலி

## குடாநாட்டில் பெரும் அச்சம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 25

யாழ்ப்பாணத்தில் எலிக் காய்ச்சல் தொடர்பான அச்சநிலை ஏற்பட்டுள்ளது. வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த ஒருவர் எலிக் காய்ச்சல் காரணமாக நேற்று உயிரிழந்ததையடுத்தே, இவ்வாறான அச்ச நிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 11



## மன்னாரில் கனமழையால் பல பகுதிகளில் வெள்ளம்!

### 7,000க்கு மேற்பட்டோர் பாதிப்பு மீட்புப் பணிகள் துரிதகதியில்

மன்னார், ஒக். 25

மன்னாரின் பல பகுதிகளில் நேற்று அதிகாலை தொடக்கம் சில மணிநேரம் நீடித்த கனமழை காரணமாக, மாவட்டத்தின் பல பகுதிகளில் வெள்ள இடர் 11

## கூரிய ஆயுதங்கள் பொலிஸால் மீட்பு!

யாழ்., ஒக். 25

யாழ்ப்பாணம், ஊர்கா வற்றுறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கூரிய ஆயுதங்கள் சில 11



## தமிழக மீனவர்களை உடன் விடுவிக்குக!

### தமிழக முதல்வர் வலியுறுத்து

சென்னை, ஒக். 25

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு, சிறையிடப்பட்டுள்ள 128 தமிழக மீனவர்களையும் உடன் விடுவிக்குமாறு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் 11

## கம்மன்பிலவின் செயற்பாடுகள் அரசியல் இலாபம் கருதியவை!

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 25

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் கம்மன்பில வெளியிட்டுள்ள அறிக்கை அரசியல் இலாபம் கருதிய செயற்பாடு என்று ஐக்கிய மக்கள் சக்தி 11

## பயங்கரவாத அச்சுறுத்தல் மூவர் இதுவரை கைது!

### அவர்களிடம் தீவிர விசாரணை

கொழும்பு, ஒக். 25

இலங்கையில் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படலாம் என்று வெளியான தகவல்களின் அடிப்படையில், தாக்குதலுக்குத் திட்டமிட்டனர் என்ற 11

## மீட்பதாகத் தெரிவித்த கறுப்புப்பணம் எங்கே?

### அநுரவிடம் நாமல் கேள்வி



கொழும்பு, ஒக். 25

உகண்டாவில் கறுப்புப் பணம் பதுக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை மீட்டெடுப்பேன் என்றும் தெரிவித்து ஆட்சிக்குவந்த ஜனாதிபதி அநுர, இன்னும் ஏன் அந்தப் பணத்தை மீட்கவில்லை என்று நாமல் ராஜபக்ச கேள்வி எழுப்பியுள்ளார்.

பொதுஜன பெரமுனவின் 11

கொக்குவில்

## இந்துக்கல்லூரிப் படுகொலை 37ஆவது நினைவேந்தல் நேற்று!

யாழ்ப்பாணம், ஒக். 25

இந்திய இராணுவத்தால் கொக்குவில் இந்துக் கல்லூரியில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட 50க்கும் மேற்பட்ட பொதுமக்களின் 37ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரியின் மைதான நுழைவாயிலுக்கு முன்பாக நேற்றுக் காலை 9.30 மணியளவில் இந்த நினைவேந்தல் உணர்வுபூர்வமாகக் 11

பொதுத்தேர்தல் வேட்பாளர்கள்

## கஜேந்திரகுமார், பார்த்திபன் வடமராட்சியில் கைதாகினர்

### பொலிஸ் பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

யாழ்ப்பாணம், வடமராட்சிப் பகுதியில் தேர்தல் விதியை மீறி பரப்புரையில் ஈடுபட்டனர் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் கஜேந்திரகுமார் 11

# பயங்கரவாதத்தை முறியடிக்க நாடெங்கும் கடும் பாதுகாப்பு!

### அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு



கொழும்பு, ஒக். 25

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தப்படவுள்ளது என கிடைக்கப்பெற்ற புலனாய்வுத் தகவல் தொடர்பில், உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார். 11

## பரப்புரைகளை முடக்கவே பொலிஸார் சதிச் செயல்!

### மணிவண்ணன் குற்றச்சாட்டு

## ஆட்சி மாறினாலும் காட்சி மாறவில்லை

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விளாசல்

விரிவுகள் :- பக். 11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்றத் தேர்தல் - 2024
சனநாயக தமிழரசு கூட்டமைப்பு

X 2

மாற்றத்தின் விதை மாம்பழம்

சுயேட்சை குழு - 14




# அரசியல் கட்சிகள் ஒரு குடையாகவேண்டும்

*காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை*




யாழ்ப்பாணம், ஒக். 25

**வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரது விவகாரத்தில் சர்வதேசம் தலையிட்டு எமக்கு நீதியைப் பெற்றுத்தரவேண்டும் எனவும் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரு குடையின் கீழ் ஒன்றுபட்டு இந்த விடயத்துக்கு தீர்வை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரி வேலணை வங்களாவடி ஸ்ரீ முருகன் ஆலயம் முன்பாக நேற்றுமுன்தினம் புதன்கிழமை முற்பகல் வடக்கு-கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

தீவகத்தில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, ஓ.எம்.பி. அலுவலகம் வேண்டாம், இரண்டு இலட்சம் ரூபா பணமும் வேண்டாம், முள்ளிவாய்க்காலில் கையளிக்கப்பட்ட உறவுகள் எங்கே? உள்ளிட்ட கோஷங்களை போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் எழுப்பியிருந்தனர்.

போராட்டத்தின்போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் யாழ்ப்பாண மாவட்ட சங்கத் தலைவி சிவபாதம் இளங்கோதை தெரிவித்ததாவது:

இலங்கை அரசபடைகளின் கைகளில் ஒப்படைக்கப்பட்ட எங்களது உறவுகள் எங்கே? அவர்களுக்கு என்ன நடந்தது? என்ற கேள்விகளுக்கு விடைதேடி ஒவ்வொரு மாதமும் போராட்டத்தை நடத்தி வருகின்றோம். இன்று தீவகத்தில் போராட்டத்தை முன்னெடுத்துள்ளோம்.

நாங்கள் சர்வதேசத்தைதான் முற்றுமுழுதாக நம்பியிருக்கின்றோம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரத்தில் சர்வதேசதலையீட்டைக் கோரியே நாம் தொடர்ந்தும் போராடி வருகின்றோம். உள்நாட்டுப் பொறிமுறை மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. அதனை நாங்கள் விரும்பாத காரணத்தால் சர்வதேசம் இந்த விடயத்தில் நேரடியாக தலையிட்டு எங்களுக்கு உரிய நீதியைப் பெற்றுத்தரவேண்டும். எங்கள் உயிர் இருக்கும் வரை இந்த போராட்டம் தொடரும் என்று தெரிவித்தார். (ஒ-100)

## கௌதாரிமுனை மணலகழ்வு: வழக்குத் தொடுத்து தடுப்போம்

*சயந்தன் தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.25

கௌதாரி முனையில் இடம்பெறும் தொடர்ச்சியான மணலகழ்வால் கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகக்கூடிய ஆபத்தான நிலைமை ஏற்பட்டுள்ளது. அந்த பிரதேச மக்கள் வாழுகின்ற உரிமையைக்கூட இழக்க நேரிடும். இதனைத் தடுக்க ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் தலைமையில் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கைத் தொடுக்கவுள்ளோம்.

-இவ்வாறு இலங்கைத் தமிழரசுக்கட்சியின் யாழ் மாவட்ட வேட்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சட்டத்தரணி கேசவன் சயந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் அமைந்துள்ள கௌதாரி முனையில் பல இயற்கையான மணல்மேடுகள் காணப்படுகின்றன.

இங்கு கடந்த சில வருடங்களாக மணலகழ்வால் கடல் நீர் உட்புகுந்து கிராமமே முற்றாக அழிந்து விடக்கூடிய ஆபத்தான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஏழு வருட கால சட்டப் போராட்டம் நடைபெற்ற போதிலும் இதற்குத் தீர்வு காணப்படவில்லை. இந்த நிலையில் நானும் ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனும் மணலகழ்வு இடம்பெறும் இடத்துக்குச் சென்று பார்வையிட்டோம். அந்தப் பிரதேசத்தில் ஏறக்குறைய 15 அடிக்கு மேலாக மணலகழ்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இதனைத் தடுத்து வளங்களைப் பாதுகாப்பதற்கு நாங்கள் மீண்டும் ஒருமுறை சட்டப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் - என்றார். (ச-26)

## தேசிய இனப்பிரச்சினை தீர்க்க வேண்டியதொன்று

*சிவசக்தி ஆனந்தன் தெரிவிப்பு*

மன்னார், ஒக். 25

தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்கிற விடயத்தில் பலமான ஒரு கூட்டணியாக நாம் செயற்படுவோம் என்று ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணியின் வேட்பாளரும் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான சிவசக்தி ஆனந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ் மக்களுக்கு கடந்த 75 வருடங்களாக ஒரு தேசிய இனப்பிரச்சினை காணப்படுகின்றது. தேசிய இனப் பிரச்சினைக்காக பல வருடங்களாக அகிம்சை ரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும் தமிழ் மக்கள் போராடி உள்ளனர். இதனால் ஆயிரக்கணக்கானவர்கள் உயிரிழந்துள்ளனர். அரசாங்கம் தமிழ்மக்களுக்கு தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்று இல்லை எனக் கூறி வருகின்றது. தமிழ் மக்களின் தேசிய இனப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும் என்கிற விடயத்தில் பலமான ஒரு கூட்டணியாக எமது கூட்டணி காணப்படுகின்றது- என்றார். (ச-56)

## எத்தனை இடர்கள் வந்தாலும் மக்கள் பணியிலிருந்து ஓயோம்!

*சிறீதரன் தெரிவிப்பு*

கிளிநொச்சி,ஒக்.25

எத்தகைய இடர்கள் வந்தாலும் இதுவரை காலமும் தனிமனித அறம் வழுவாது ஆற்றிய பணிகளின் தடத்தில், இனியும் எனது அரசியற் களப்பணி தொடரும் என நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

பொய்ப் பிரசாரங்கள் என்பவற்றின் ஊடாக மக்கள் மத்தியில் எமக்கிருக்கும் செல்வாக்கை மதிப்பிழக்கச் செய்யும் செயற்பாடுகளைப் பலரும் முன்னெடுத்து வருகிறார்கள். ஆனால், எமது மக்கள் தீர்க்கம் நிறைந்த அரசியல் பார்வையோடும், தெரிவுகள் குறித்த தெளிவோடும் உள்ளனர் என்பதை நான் அறிவேன்- என்றார். (ச-45-26-113)

## வள்ளலாக மாறிய அநுர

ஜனாதிபதிக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளம் உள்ளிட்ட கொடுப்பனவுகளை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தனக்கு இவ்வாறு வழங்கப்படும் கொடுப்பனவுகளை, நாடாளுமன்ற உறுப்பினர்களின் சம்பளம் தொடர்பான நிதியத்துக்கு ஒதுக்குமாறு ஜனாதிபதி அறிவுறுத்தியுள்ளார். நூலகம் திறப்பு, நலன் புரிச்சேவை, மருத்துவ உதவிகள் உள்ளிட்ட விடயங்களுக்கு மேற்படி நிதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த நிதியத்தின் ஊடாக சேவைகளை முன்னெடுப்பதற்கு ஏதேனும் தடை ஏற்படின், அதற்கு தேசிய மக்கள் சக்தியின் தொகுதிகளை அணியின் ஆதரவை பெறுமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். (ச-44)

## மூவின மக்களின் ஆசியில் அரசாட்சி

*ஜனாதிபதி தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.25

இலங்கை வரலாற்றில் மூவின மக்களினதும் ஆதரவைப்பெற்ற ஓர் அரசாங்கமாக எமது அரசாட்சி அமையும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

திருகோணமலையில் இடம்பெற்ற தேர்தல் பிரசார ஊர்வலத்தின் இறுதியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நடந்து முடிந்த ஜனாதிபதித் தேர்தலின் பின் தேசிய மக்கள் சக்தி வடக்கில் எழுச்சி பெற்றுள்ளது. நான் இலங்கையன் என பெருமையுடன் அனைவரும் கூறத்தக்க வகையில் எமது சட்டங்கள் வகுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## புற்றுநோய் பேரணி

யாழ்ப்பாணம், ஒக்.25

மார்பகப் புற்றுநோய் விழிப்புணர்வுப் பேரணி சுகாதார அமைச்சின் தேசிய புற்றுநோய் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுகாதாரப் பிரிவினரால் யாழில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்.பொதுநூலகம் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட பேரணி யாழ். பிரதேச செயலகத்தைச் சென்று நிறைவடைந்தது.

பேரணியில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன், யாழ். பிரதேச செயலர் சுதர்ஷன், மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி மருத்துவர் தவருபன், சுகாதாரப் பணிமனை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி-20)

## விபத்தில் சிக்கிய அம்புலன்ஸ்

கிளிநொச்சி, ஒக். 25

மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்குச் சொந்தமான அம்புலன்ஸ் நோயாளர்களுடன் கிளிநொச்சியில் நேற்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

நோயாளர்களை எம்.ஆர். பரிசோதனைக்கு யாழ்ப்பாணம் அழைத்துச் சென்று மட்டக்களப்பு திரும்பிக்கொண்டிருந்த மட்டக்களப்பு போதனா மருத்துவமனை அம்புலன்ஸ், கிளிநொச்சியில் மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் படுகாயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அம்புலன்ஸில் மூன்று நோயாளர்கள் பயணித்த நிலையில் நோயாளர்களுக்கு எந்தவிதப் பாதிப்பும் இல்லை. எனினும் அவர்களும் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஒ-113)




## டெங்கு ஒழிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.25

யாழ். மாநகரப் பகுதியில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகி நாளை சனிக்கிழமை வரை நடைபெறும். நேற்று வியாழக்கிழமை வண்ணார்பண்ணை பிரதேசத்தில் நடைபெற்றது. இன்று வெள்ளிக்கிழமை யாழ். நகர் பிரதேசத்திலும் நாளை சனிக்கிழமை கொழும்புத்துறையிலும் நடைபெறும். இதன்போது பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்குமாறு சுகாதாரப் பிரிவினர் கேட்டுள்ளனர். (ரி-17)






## மரம் வீழ்ந்து கடை சேதம்

கிளிநொச்சி, ஒக்.25

கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தருமபுரம் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை பெய்த கடும் மழையால் வீதியோரமாக நின்ற மரம் ஒன்று வேருடன் சாய்ந்து கடையின் மீது வீழ்ந்ததில் கடையின் ஒருபகுதி சேதமடைந்துள்ளது.

அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் கடையின் மீது விழுந்த மரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொண்டனர். (ச-45-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவரங்கம்

யாழ்ப்பாணம், ஒக்.25

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் விரிவுரையாளர் இயல் இசை வாரிதி ம.த.ந.வீரமணிஐயரின் நினைவரங்க நிகழ்வு கலாசாலையின் ஆரம்பக்கல்வி ஆசிரிய மாணவி திருமதி கமலக்கண்ணன் மைதிலி தலைமையில் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் வீரமணி ஐயரின் உருவச் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு, நினைவுச் சுடர்கள் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள அழகியல் பாட முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி மதிவாணி விக்னராஜா அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொண்டு 'யாழ்ப்பாணம் வீரமணி ஐயர் ஒரு பன்முகப் பார்வை' எனும் தலைப்பில் உரையாற்றினார். (ச-45-66)





# வாசிப்பை ஊக்குவிப்பதற்கு நூலகம் அமைத்தல் போட்டி

யாழ்ப்பாணம், ஒக்.25

வாசிப்பு மாதத்தையொட்டி யாழ்.மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் வீட்டு நூலகம் உருவாக்கும் போட்டி நடத்தப்படவுள்ளது.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டவர்களாக இருப்பவர்கள், வாசிப்பில் ஆர்வம் உள்ளவர்கள், வீட்டில் நூலகத்தைப் பேணுபவர்கள் பொதுநூலகத்தின் சிறுவர் பகுதியுடன் தொடர்பு கொள்ளவும்.

போட்டியில் வீட்டு நூலகம் வைத்திருப்போரில் சிறந்த வீட்டு நூலகம் தேர்வு செய்யப்பட்டு 10 பேருக்கு மதிப்பீட்டின் அடிப்படையில் நூல்கள் அன்பளிப்பாக வழங்கப்படும் என்று யாழ். மாநகரசபை பிரதம நூலகர் தெரிவித்துள்ளார். (ச-45)

# ஒன்றுகூடல்

கிளிநொச்சி, ஒக்.25

கிளிநொச்சி வடக்கு வலய மாணவர் நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் ஒன்றுகூடல் சமூக விஞ்ஞான பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் பூ.திருக்குமார் தலைமையில் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரியில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வலயக் கல்விப் பணிப்பாளர் அ.சிவனருள்ராஜா கலந்துகொண்டார். (ச-45-13)





# வள்ளிபுனம் ம.வி.க்கு இரண்டு தங்கங்கள்

முல்லைத்தீவு, ஒக்.25

மாகாணமட்ட துரித கணிதப்போட்டியில் இரண்டு தங்கப்பதக்கங்களைப் பெற்று முல்லைத்தீவு வள்ளிபுனம் மகா வித்தியாலயம் சாதனை படைத்துள்ளது.

மேற்படி பாடசாலையைச் சேர்ந்த தரம் - 5 சு .சுலக்சி மற்றும் தரம் - 4 ம.கேமிகா ஆகிய மாணவிகள் தங்கப்பதக்கங்களைப் பெற்றுக்கொண்டனர். (ச-45-555)

# ஆசிரியர் தின விழா

சாவகச்சேரி, ஒக்.25

2024 ஆம் ஆண்டுக்கான தென்மராட்சிக் கல்வி வலயத்தின் ஆசிரியர் தினவிழா தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கி. கமலராஜன் தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக் கழகத்தின் கல்வியியற்றுறைத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆ.நித்திலவர்ணன், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்களான சு.கிருஸ்ணகுமார், சு.சுந்தரசிவம், த. கிருபாகரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ச-45-555)

# சடலத்தைப் பொறுப்பேற்குக

யாழ்ப்பாணம், ஒக்.25

கடந்த ஓகஸ்ட் மாதம் 27ஆம் திகதி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட என்.சிவகுமார் (வயது-58) என்பவர் கடந்த செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி இறந்துவிட்டார். உருத்திரபுரம் கிளிநொச்சியை வசிப்பிடமாகக் கொண்ட இவரின் சடலத்தை யாரும் உரிமை கோராததால் சடலம் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சடலத்தை அடையாளம் காட்டி 14 நாள்களுக்குள் பெற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. புதிய முயற்சிகளை தொடங்குவது சாதகமாக முடியும். பணிச்சுமை குறைவதால் உற்சாகமாக இருப்பீர்கள். சலுகை கிடைக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த காரியங்கள் சற்று இழுபறிக்குப்பிறகு சாதகமாக முடியும். எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்து விடுவீர்கள். அலுவலகத்தில் உற்சாகமான சூழ்நிலை காணப்படும். பணிகளில் உதவி செய்வீர்கள். வியாபாரத்தில்

**மிதுனம்:** பு மனம் உற்சாகத்துடன் காணப்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. மற்றவர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும். பேச்சில் பொறுமை அவசியம். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கக்கூடும்.

**கடகம்:** அவசர முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும். எதிர்பாராத செலவுகளால் கையிருப்பு கரைவதுடன் கடன் வாங்கவும் நேரிடும். உறவினர்கள் வருகையால் மகிழ்ச்சி ஏற்படும். சில சங்கடங்களும் ஏற்படக்கூடும். உங்கள் பணிகளில் கூடுதல் கவனம் தேவைப்படும்.

**சிம்மம்:** காரியங்கள் தாமதமாக முடியும். சிலருக்கு வாழ்க்கைத்துணைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். வியாபாரத்தில் விற்பனையும் இலாபமும் எதிர்பார்த்தபடி இருக்கும். சக ஊழியர்களின் பணிகளில் உதவி செய்து உற்சாகப்படுத்துவீர்கள்.

**கன்னி:** எதிர்பார்த்த காரியங்கள் அனுகூலமாக முடியும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும்.

**துலாம்:** வீண் செலவுகள் ஏற்படக்கூடும். முக்கியமான முடிவுகள் எதுவும் எடுக்கவேண்டாம். கூடுமான வரை வீண் அலைச்சலைத் தவிர்த்து விடுவது நல்லது. செலவுகள் ஏற்படும். பணிகளில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டியது அவசியம்.

**விருச்சிகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிக்கக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்படக்கூடும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும்.

**தனுசு:** பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம். காரியம் அனுகூலமாக முடியும். அலுவலகத்தில் வழக்கமான நிலையே காணப்படும். வியாபாரம் வழக்கம் போலவே இருக்கும். பொருள் சேர்க்கைக்கும் வாய்ப்பு உண்டு.

**மகரம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கொடுத்த கடன் திரும்பக் கிடைக்கும். குடும்பத்தில் உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும். பிள்ளைகளால் பெருமை அடைவீர்கள். அலுவலகத்தில் பணிகள் அதிகரிக்கும்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் செல்ல நேரிடும்.

**மீனம்:** உற்சாகமான நாளாக அமையும். ஆனால், புதிய முயற்சி எதையும் மேற்கொள்ள வேண்டாம். சிலருக்கு திடீர்ச் செலவுகளால் கடன் வாங்கவும் நேரிடும். சகோதரர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## எச்சரிக்கையும் அவதானமும்

அம்பாறையிலுள்ள, அறுகம்பேயில் பயங்கரவாதத் தாக்குதல் சாத்தியங்கள் உள்ளதாக அமெரிக்கா வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கை நாட்டில் - மக்களிடையே ஒருவிதப் பதற்றத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. 2019ஆம் ஆண்டு நடந்த உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் இந்தப் பதற்றத்துக்குக் காரணமாகவிருக்கலாம். இந்தப் பயண எச்சரிக்கைகளை - பதற்றத்தை நீக்குவதில் அரசாங்கம் அசமந்தம் காட்டுமானால் அது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்திவிடக்கூடும். அமெரிக்காவும் - அதைத் தொடர்ந்து பிரித்தானியா, நியூஸிலாந்து, அவுஸ்திரேலியா, ரஷ்யா போன்ற நாடுகளும் இலங்கையில் - முக்கியமாக அறுகம்பேயில் பயங்கரவாதத் தாக்குதல் நடக்கக்கூடும் என்று தங்கள் நாட்டுப் பிரஜைகளுக்கு அறிவித்திருக்கின்றன. அறுகம்பேயில் தங்கியிருக்கும் தங்கள் நாட்டுப் பிரஜைகளை அங்கிருந்து அகன்று செல்லுமாறு இஸ்ரேல் அவசர அறிவிப்பொன்றையும் விடுத்திருக்கின்றது. இதை ஒரு சாதாரண விடயமாகக் கருதி அகன்றுவிடமுடியாது. இந்தப் பயண எச்சரிக்கை தொடருமானால் இலங்கையின் பிரதான வருமான மார்க்கமாக இருக்கும் சுற்றுலாத் துறை பெரும் பாதிப்புகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதும் - இலங்கையின் பொருளாதாரம் பெருத்த அடிவாங்கும் என்பதும் நிதர்சனம்.

இந்தப் பயண எச்சரிக்கை வெளியானதும் அறுகம்பே பிரதேசத்தின் பாதுகாப்பைப் பலப்படுத்தியிருக்கின்றது அரசாங்கம். அங்கு பொலிஸாரும், விசேட அதிரடிப்படையினரும் களமிறக்கப்பட்டு விசேட சோதனைநடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. சந்தேகத்தின் அடிப்படையில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்ற தகவல்களும் வெளியாகியிருக்கின்றன. ஆனால் இந்த விவகாரத்தில் அரசாங்கம் முள்ளின் மீது விழுந்த சேலையைச் சேதமில்லாது எடுக்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றது. நாட்டில் பொதுத்தேர்தலொன்று நடக்கவிருக்கும் நிலையில், இந்தச் சிக்கல் நிலைமையை பூதாகரமாக்கி அரசாங்கத்துக்கு நெருக்கடி கொடுக்க எதிர்க்கட்சிகள் கண்டிப்பாக முயலும். திடீரென வெளிவந்திருக்கும் பயங்கரவாதத் தாக்குதல் எச்சரிக்கை, நாட்டில் திடீரென முன்னெடுக்கப்படும் சோதனை நடவடிக்கைகளை அவர்கள் அரசியல் ஆதாயங்களுக்காகப் பயன்படுத்தவும் முடியும். அவ்வாறு நடக்குமானால் அது நிச்சயம் நிலைமையை இன்னமும் சிக்கலாக்குவதுடன், வெளிநாட்டினர் இலங்கைக்கு வருவதிலும் தாக்கத்தைச் செலுத்தும்.

அரசாங்கம் விரைவாகச் செயற்பட்டு வெளிநாடுகளின் பயண எச்சரிக்கைகளை நீக்குவதற்கான முன்னெடுப்புகளை மேற்கொள்ளவேண்டும். அதேநேரம் நாட்டு மக்கள் பயம் - பதற்றம் கொள்ளாதவகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் இறுக்கமாக்கவேண்டும். அரசாங்கம் இவற்றை எந்தளவு விரைவாகச் செய்கின்றதோ அந்தளவுக்கு நாட்டின் பிரதான வருமான மார்க்கமாக இருக்கும் சுற்றுலாத்துறை காப்பாற்றப்படும். இந்த விடயத்தில் அரசாங்கம் சரியான நகர்வுகளை மேற்கொள்ளத் தவறினால் இன்னும் இரண்டொரு மாதங்களில் அதன் விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும்.



# தாக்குதல் எச்சரிக்கை அரசாங்கம் அசமந்தம்

## காஞ்சன விஜயசேகர கவலை

**கொழும்பு, ஒக்.25**

**அறுகம்பை வளைகுடா பகுதியில் இஸ்ரேலிய சுற்றுலாப் பயணிகளுக்கு எதிரான தாக்குதல் அச்சுறுத்தல் குறித்து ஒக்ரோபர் 7 ஆம் திகதியே தகவல் கிடைத்த போதிலும், அரசாங்கம் செயற்படாமல் இருப்பது குறித்து முன்னாள் அமைச்சர் காஞ்சன விஜயசேகர கவலை வெளியிட்டுள்ளார்.**

இது குறித்து எக்ஸ் தளப் பதிவில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

தாக்குதல் அச்சுறுத்தல்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து, அரசாங்கம் வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகளுக்கு ஏன் விளக்கம் அளிக்கவில்லை. தேசியப் பாதுகாப்புக்கு ஏற்படும் அச்சுறுத்தலை ஒருபோதும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளக்கூடாது, சுற்றுலா வருமானம் நாட்டின் மிக முக்கியமான வருமான ஆதாரங்களில் ஒன்றாகும். அரசாங்கத்திடம் முன்கூட்டியே தகவல் இருந்திருந்தால் மற்றும் இராஜதந்திர தூதரகங்களுக்கு அது தொடர்பில் விளக்கியிருந்தால், எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுடன் பயண ஆலோசனை எச்சரிக்கையை தடுத்திருக்கலாம். இலங்கைக்கான பயண ஆலோசனையை நீக்க வெளிநாட்டுத் தூதரகங்களுடன் இணைந்து செயற்படவேண்டும் - என்றார். (ச)

## நான்கில் ஒருவருக்கு பக்கவாதப் பாதிப்பு

கொழும்பு, ஒக்.25

பக்கவாத நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது நான்கில் ஒருவருக்கு தமது வாழ்நாளில் பக்கவாதம் ஏற்படும் நிலை காணப்படுவதாகவும் இலங்கை தேசிய பக்கவாத சம்மேளனத்தின் தலைவர் மருத்துவர் காமினி பத்திரன தெரிவித்தார். (ச-இ)

## மகசின் சிறையில் ஜோன்ஸ்டன்

விளக்கமறியலில்வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தற்போது மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ கோட்டை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டதையடுத்து எதிர்வரும் 30 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## மழையால் மீள் விதைப்பு

காலபோக நெற்செய்கை வயல்களிலுள்ள வெள்ள வாய்க்கால்கள் சீரமைக்கப்படாததால் அண்மையில் பெய்த மழையால் பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கி வயல்களில் மீள் விதைப்பு மேற்கொள்ளப்பட்டன. வயல்களுக்குள் காணப்படும் வாய்க்கால்களை கமக்கார அமைப்புகள் புனரமைக்காததால் பயிரழிவு ஏற்பட்டதென தென்மராட்சிப் பிரதேச நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர். (ரி-9)

## சுற்றுலாவிகளின் பாதுகாப்பு உறுதி

கொழும்பு, ஒக்.25

அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது என்று இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகம் தெரிவித்துள்ளது. எதிர்வரும் சுற்றுலாப் பருவத்தில் உலகெங்கிலும் உள்ள சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுக்கிறோம். இலங்கையின் அழகை ஆராயும் அனைத்து சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் தங்கியுள்ள அனைத்து சுற்றுலாப் பயணிகளுக்கும் உயர் மட்ட பாதுகாப்பு பேணப்படும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## நாளை

26.10.2024

சனிக்கிழமை - ஐப்பசி - 09

[illegible] : 03.02 - 04.33

ராகுகாலம் : 09.03 - 10.23

## நாளொரு நல்வார்த்தை

**நாத்திகம் தொடங்கும் இடத்தில் கம்யூனிசம் தொடங்குகிறது.**

- கார்ல் மார்க்ஸ் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# University of Jaffna

## INVITATION FOR BIDS

### Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna – 2025

1. The Chairman, Procurement Committee, University of Jaffna will receive sealed Bids for the following contracts up to 10.00 am on 14th November, 2024 from the eligible Firms.

| Contract No (1) | Service (2) | Yearly Estimated Cost ( Rs. in Mn) excluding VAT (3) | Past Experience | | | Bid Security Rs. (7) |
|---|---|---|---|---|---|---|
| | | | One similar contract Rs. in Mn (4) | Annual average volume Rs. in Mn (5) | Trained staff available (6) | |
| UJA/CWP/CS/ 2025/01 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2025 (Jaffna) | 75.0 | 10.0 | 30.0 | 75 | 750,000.00 |
| UJA/CWP/CS/ 2025/02 | Provision of Cleaning, Janitorial and Maintenance Services for University of Jaffna – 2025 (Kilinochchi) | 39.6 | 5.0 | 15.0 | 30 | 400,000.00 |

2. Period of contract should be 365 days subject to a performance evaluation period of 60 days.
3. Firms which satisfy the following conditions are eligible to submit Bids. Documentary evidences should be provided with Bids.
   - 3.1 Must be registered in Sri Lanka under the Company's Acts or Business Name Registration Ordinance.
   - 3.2 Must have satisfactorily carried out at least one cleaning service contract to a Government Department/ Corporation/ University during the last 3 years where the annual contract sum is not less than the value indicated in column 4 above against each contract.
   - 3.3 Average of annual volume of cleaning service contracts performed in the last 3 years should be at least the value indicated in column 5 above against each contract.
   - 3.4 Availability of trained and experienced Sri Lankan staff during the last 3 years should be at least the value indicated in column 6 above against each contract.
4. Interested bidders may obtain further information from Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, and inspect the bidding documents at the same address on any working day during working hours.
   Contact numbers are: Phone. Tel: 021 221 9201 Fax: 021 221 9201
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, until 13th November, 2024 from 9:00 hrs to 16:00 hrs upon payment of a non-refundable fee of Rupees fifteen thousand (Rs. 15,000/-) for bid No. UJA/CWP/CS/2025/01 and Rupees eight thousand (Rs. 8,000/-) for bid No. UJA/CWP/CS/2025/02 to be deposited to the People's Bank, University of Jaffna with the Reference No "970000060000276" should be filled in the Account Number column in the Deposit Slip. All bids shall be accompanied by a bid security for the amount as indicated in column 6 for each contract in Bank Guarantee valid for 120 days (should be as 14.03.2025) from scheduled bid opening date obtained from a recognized commercial bank operating in Sri Lanka in favour of the Vice Chancellor, University of Jaffna should be accompanied with each bid.
6. Bidders are strongly advised to attend the pre-bid meeting on 7th November, 2024 at 10.00 hrs in the board room of the University of Jaffna for contract No UJA/CWP/CS/2025/01 and pre-bid meeting on 8th November, 2024 at 10.00 hrs in the Engineering Service Division, Ariviyalnagar, Kilinochchi for contract No UJA/CWP/CS/2025/02 and visit each location before pricing.
7. Bids shall be delivered or sent by registered post to the Deputy Registrar, Capital Works & Planning Branch, University of Jaffna, Thirunelvely, Jaffna P.O Box 57 or be deposited in the tender box kept in the Capital Works & Planning Branch, to reach before 10.00 hrs, 14th of November 2024. Bids will be opened soon after closing the bids in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be Valid for a period of 91 Days from the date fixed for closing of Bids or any extended period.

Chairman,
Procurement Committee,
University of Jaffna, Thirunelvely, Jaffna.
24.10.2024

(CR/43473) J-1




# பரப்புரைச்சமரில் முன்னாள் ஜனாதிபதிகள்

யாழ்ப்பாணம், ஒக்.25

பொதுத்தேர்தலில் முன்னாள் ஜனாதிபதிகள் மூவர் போட்டியிடாவிட்டாலும், அவர்கள் பிரசார நடவடிக்கைகளில் பங்கேற்கவுள்ளனர்.

அதற்கமைய சிலிண்டர் கூட்டணியின் பிரதான கூட்டங்களில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச, மொட்டுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரதான பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றுவதற்குத் திட்டமிட்டுள்ளார்.

அதேபோல முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், தனது மகனின் வெற்றிக்காக பொலநறுவை மாவட்டத்தில் பிரசாரச் சமரில் பங்கேற்றுள்ளார். (ச-44)

# ரணிலின் விசாரணைக்குழு சந்தேகத்துக்குரியது!

## மல்கம் ஆண்டகை தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.25

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நியமித்த அல்விஸ் விசாரணைக் குழு அறிக்கையை நாம் ஏற்கவில்லை. அது சந்தேகத்துக்கிடமானது என்று பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தாக்குதல் தொடர்பாக பெறப்பட்ட முந்தைய உளவுத்துறை தொடர்பான அரச புலனாய்வுச்சேவை, தேசிய புலனாய்வுத் தலைவர் மற்றும் பிற தொடர்புடைய அதிகாரிகளின் நடவடிக்கைகளை விசாரிக்க குழு நியமிக்கப்பட்டது. அதன்போது ரணில் விக்கிரமசிங்க புதிய குழுவொன்றை நியமித்தமை சந்தேகத்துக்குரியது.

உதய கம்மன்பில இவ்வளவு காலம் அமைதியாக இருந்தார். அவர் ஏன் திடீரென இதைப் பற்றிப் பேச முனைகிறார்? எனவே வெளிப்படைத்தன்மையுடைய முழுமையான விசாரணையை எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ச-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளர் யாழில் அதிகரிப்பு

ஆய்வில் தகவல்

யாழ்ப்பாணம், ஒக்.25

**இலங்கையில் நீரிழிவு நோயாளர் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ள நிலையில் கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.**

அண்மையில் முன்னெடுக்கப்பட்ட புதிய ஆய்வுகளின் மூலம் இந்த விடயம் தெரியவந்துள்ளது.
40 வயதைக் கடந்த நான்கு பேரில் ஒருவருக்கு அதாவது 25 வீதமானவர்கள் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.
கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.
இந்த மாவட்டங்களில் சுமார் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது எனவும், அதில் 33 விகிதமானவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நீரிழிவுக்கான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக மருத்துவரிடம் சென்று பரிசோதனை செய்து உரிய நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்றும் மருத்துவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (ச-இ)

## மீனவர் பிரச்சினைக்குத் தீர்வு இந்தியத் தூதுவர் ஆராய்வு

கொழும்பு, ஒக்.25
இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக குமாநாயக்கவை கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார். வடக்குக் கடலில் தற்போது நிலவும் கடற்றொழில் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் இந்தச் சந்திப்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. ஒத்துழைப்பை மேம்படுத்துவதன் மூலம் இரு நாட்டு மீனவர்களின் பிரச்சினைகளுக்கு நீண்டகால தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தை இரு தரப்பினரும் வலியுறுத்தினர். அத்துடன் இலங்கையில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் இந்தியத் திட்டங்கள் தொடர்பிலும் மீளாய்வு செய்யப்பட்டது. (ச-இ)

## அடுத்த ஆண்டிலே வேலைவாய்ப்புகள்

*வேலையற்ற பட்டதாரிகளின் கூட்டமைப்பு தெரிவிப்பு*

கொழும்பு, ஒக்.25
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கமாட்டாது என்ற வதந்திகளை நம்ப வேண்டாமென வேலையற்ற பட்டதாரிகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.
இந்தச் செயல் தேர்தலை மையப்படுத்திய போலிப் பிரசாரமாகும்.
தேசிய மக்கள் சக்தி ஆட்சியமைத்தவுடன் 2025 ஜனவரி,பெப்ரவரி மாதங்களில் வரவு - செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படும்.
வரவு - செலவுத்திட்டத்தில் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்குவதற்கு உரிய ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படும்.
அரச சேவையில் இணைந்து கொள்வதற்கான வயதெல்லையை தாண்டியுள்ள பட்டதாரிகளின் நிலை பற்றியும் தாம் ஜனாதிபதியுடன் கலந்துரையாடியதாகவும் இம்முறை மட்டும் அவர்களையும் உள்வாங்குவதற்கு ஜனாதிபதி இணங்கியுள்ளதாகவும் வேலையற்ற பட்டதாரிகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. (ச-25, 6)

## அத்துமீறிய மீன்பிடி
## 21 இந்திய மீனவர்கள் நெடுந்தீவில் கைது!

யாழ்ப்பாணம், ஒக்.25
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 16 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ். நெடுந்தீவு கடற்பரப்பினுள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது ரோந்துப் பணியில் ஈடுபட்ட இலங்கைக் கடற்படையினரால் இந்தக் கைது இடம்பெற்றது.
இதன்போது 2 படகை கடற்படையினர் கைப்பற்றியதோடு அதிலிருந்த 16 கடற்றொழிலாளர்களையும் கைதுசெய்தனர்.
கைது செய்யப்பட்டவர்கள் மயிலிட்டிக்கு அழைத்து வரப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைக்காக கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறைத் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ச-இ)

## கசிப்புடன் இருவர் கைது!

சுழிபுரம் பெரியபுலோ பகுதியில் இரண்டு போத்தல் கசிப்புடன் இரண்டு சந்தேகநபர்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டனர். வட்டுக்கோட்டை பொலிஸார் முன்னெடுத்த சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே இந்தக் கைது இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளின் பின்னர் அவர்கள் இருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற் கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ரி 27)

## 'விநியோகச் சங்கிலி முகாமைத்துவம்' புதிய பாடம் அறிமுகம்

கொழும்பு, ஒக்.25
2025 ஆம் ஆண்டு முதல் விநியோக சங்கிலி முகாமைத்துவம் என்ற புதிய பாடம் க.பொ.த. உயர்தர வகுப்பு வர்த்தகத்துறை மாணவர்களுக்கு வியாபாரக் கற்கைகள் பாடத்தில் ஒரு அலகாக அறிமுகம் செய்யப்படவுள்ளது.
விநியோக சங்கிலி முகாமைத்துவதை தனிப்பாடமாக அறிமுகம் செய்வதே எமது நோக்கம் எனத் தேசிய கல்வி நிறுவனம் தெரிவித்துள்ளது. விநியோக சங்கிலி முகாமைத்துவம் அரச,தனியார் நிறுவனங்களுக்கும்,குடும்பங்களுக்கும் அத்தியாவசியமான ஒன்று. மேலதிக செலவுகள்,சேதாரங்கள் என்பவற்றை குறைப்பதற்கு விநியோக சங்கிலி முகாமைத்துவம் அவசியம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை விநியோக சங்கிலி முகாமைத்துவச் சட்டம் 1981 ஆம் ஆண்டு இயற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-6)

## தினம் தெரியுமோ?

காதும் காதும் வைச்சமாதிரி யாழ்ப்பாணம் நல்லூர் கோயில் வீதியில ரண்டுமூண்டு நாளா ஒரு கண்காட்சி நடந்திருக்குது. முன்னுக்கு ஒரு பனர் மட்டும் வைச்சு, தங்களுக்கு தெரிஞ்ச சிலருக்கு மட்டும் அழைப்பு விட்டு அந்தக் கண்காட்சியை தொடங்கியிருக்கினம் அதை நடத்தின ஒரு என்.ஜி.ஓ. காரர். ஆனால் கண்காட்சிக்கு போனவை அக்கம் பக்கம் பார்த்து, முழிசினபடிதான் உள்ளுக்க போய், வெளியில வந்தவையாம். வெளியில வரேக்கையும் சிலர் தங்கட முகத்தை மாஸ்க் போட்டு மறைச்சுக்கொண்டு, ஆரும் தங்களைப்பாக்கினமோ எண்டு நோட்டம் விட்டிட்டு, அப்பிடி ஆருமில்லை எண்டு உறுதிப்படுத்தினபிறகுதான் வாகனத்தை எடுத்துக்கொண்டு போயிருக்கினம். இப்பிடி ஒளிச்சு மறைச்சு நடத்திற அளவுக்கு அப்பிடி என்ன கண்காட்சி எண்டு உங்களுக்கும் விடுப்பறிய விருப்பமாயிருக்கும். அந்தக் கண்காட்சிக்குப் பேர் 'பாலியல் தொழில் பற்றிய பெண்களின் வரலாறு'. இஞ்ச விபசாரம் செய்யிற பொம்பிளையள் ஏன் இந்தத் தொழிலுக்கு வந்தவை? அந்தத் தொழிலால என்னென்ன கஷ்டப்பட்டிருக்கினம்? சமூகம் எப்பிடி அவையை ஒதுக்கி வைச்சிருக்கு? எண்டு அவையின்ர வலியைப் பதிவு செய்யத்தான் உந்தக் கண்காட்சியாம். இதில என்ன கூத்தெண்டால், இந்தக் கண்காட்சியைப் பாக்கிறதுக்கு சில கம்பஸ் லெக்சர்மார் தங்களிட்டப் படிக்கிற பொம்பிளைப்பிள்ளையளையும் விபசாரம் செய்யிற பொம்பிளையளின்ர கஷ்டத்தைப் பாத்திட்டு வாங்கோ எண்டு அனுப்பி வைச்சதுதான்.

திருநங்கையர், திருநம்பியர் இஞ்ச படுகிற கஷ்டங்களை, அவையை எங்கட சமூகம் புறக்கணிக்கிறதைச் சொன்னால் கட்டாயம் எல்லாரும் போய்ப் பாக்கத்தான் வேணும். விழிப்புணர்வு அடையத்தான் வேணும். ஏனெண்டால் அவை இப்பிடி விரும்பி பெண்ணா இருந்திட்டு ஆணாவோ, ஆணா இருந்திட்டு பெண்ணாவோ மாறேலை. இயற்கை அவையை அப்பிடி மாத்தவைச்சிருக்குது. அதால அவையை நாங்கள் ஒதுக்காமல் ஏற்க வேணும். அவை சம்பந்தமா இப்பகன இடங்களில நடக்கிற விழிப்புணர்வுக்கு வரவேற்புக் கிடைக்கிறதைப் பார்த்த ஒரு என்.ஜி.ஓ, 'ஏன் நாங்கள் விபசாரிகளின்ர வலியைச் சொல்லி, புரஜெக்ட் எழுதி உழைக்கக்கூடாது?' எண்டு ரூம் போட்டு யோசிச்சிருப்பினம் போல. அதுதான் இப்பிடி ஒரு கண்காட்சியை வைச்சிருக்கினம். உண்மையில இஞ்ச உழைச்சு வாழ நினைச்சால் ஆயிரம் தொழில் இருக்கு. அதைவிட்டிட்டு உடம்பை வித்து வாழவேணுமெண்டு ஒரு கட்டாயமும் இஞ்ச இல்லை. அதோட இந்தியா மாதிரி பொம்பிளையளைக் கடத்திக்கொண்டு போய், அவையை அடிமையா வைச்சு பாலியல் தொழில் செய்யிறவையும் இஞ்ச இல்லை. இஞ்ச உள்ள விபசாரியள் எல்லாரும் தாங்களா விரும்பிப்போய்த்தான் உந்தத் தொழில் செய்யினம். அப்பிடி ஒரு தொழிலுக்கு இலங்கையில சட்டபூர்வ அனுமதியும் இல்லை.

இலங்கையில சட்டவிரோதமான உந்தத்தொழிலுக்கு கண்காட்சி வைச்சதே முதல் குற்றம்.அதைவிட இஞ்ச ஏற்கனவே கலாசாரம் கந்தறுந்துகொண்டிருக்கேக்க, விபசாரியள் செய்யிற வேலையளுக்கு முட்டுக்குடுக்கிற மாதிரி இப்பிடி கண்றாவிக் கண்காட்சியளை வைச்சு இன்னும் எங்கட யாழ்ப்பாணத்தைச் சீரழிக்கிறதெண்டு சிலர் முடிவு செய்திட்டினம் போல. எவ்வளவோ செய்யவேண்டிய வேலையள் கிடக்க, உவையள் உப்பிடி உதவத்த தொழிலுக்கெல்லாம் நல்லூர்க்கந்தன்ர வீதியில கண்காட்சி வைக்கிற கொடுமையை எங்க போய்ச் சொல்லியழ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு 30 . 10 . 1992

உதிர்வு 26 . 09 . 2024

## கதிர்காமச்சந்திரன் வினோத்

(HNB Assurance - Jaffna நிறைவேற்று அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தர்)

மலர்மகள் வீதி மட்டுவில் தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும். வதிவிடமாகவும் கொண்ட கதிர்காமச்சந்திரன் வினோத் அவர்களின் 31ம் நாள் நினைவுக்கிரியை மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனை என்பன நாளை (26.10.2024) சனிக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் என்பதனை அறியத் தருவதுடன்

கடந்த 26.09.2024 வியாழக்கிழமை அன்று எமது குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும். தொலைபேசி. சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். கண்ணீர் அஞ்சலி பதாகைகள் மற்றும் துண்டுப் பிரசுரங்கள் ஊடாக எமது துயரில் பங்கு கொண்ட உற்றார். உறவினர். நண்பர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு

**இவ் அழைப்பினை தனி நபர் அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

**குறுமுனி அம்மன் கோயிலடி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.**

(CR/43472) J-1

**குடும்பத்தினர்**
077 540 0885

# வரிச்சுமைகளைக் குறைக்க இணைந்து பயணிப்போம்

## சஜித் தெரிவிப்பு



கொழும்பு, ஒக்.25

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தை ஐக்கிய மக்கள் சக்தி கட்சிக்கு மக்கள் வழங்கினால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுடன் இணைந்து மக்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் புதிய இணக்கப்பாட்டை எட்டுவோம் என ஐக்கிய மக்கள் சக்தியினதும் ஐக்கிய மக்கள் கூட்டணியினதும் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான அரசால் நடைமுறைப்படுத்தப்பட்ட முறையற்ற வரிச்சூத்திரங்களை அநுர குமார திஸாநாயக்க வின் அரசு சர்வதேச நாணயநிதியத்துடன் கலந்துரையாடி இந்த வரிச்சூத்திரத்தை மாற்றும் என மக்கள் எதிர்பார்த்தனர்.

ஜனாதிபதி தலைமையிலான அரசால் முன்னெடுக்கப்பட்டு வந்த வரிச்சூத்திரம் நியாயமற்றது, எனவே அது மாற்றியமைக்கப் படவேண்டும். இலக்கு நிர்ணயிக்கப்பட்ட அரச வருவாயை விட அதிக வருவாயைப் பெறும் இந்த நியாயமற்ற வரிச்சூத்திரத்தை மக்கள் ஆணை மூலம் நாம் மாற்றியமைப்போம்.

சர்வதேச நாணயநிதிய ஒப்பந்தத்தில் உள்ள மக்கள் விரோத விதிகளை மாற்றி, மக்கள் பக்கம் இருந்து மக்களுக்குச் சுமையை ஏற்படுத்தாது, சர்வதேச நாணயநிதியத்துடன் மக்கள் வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் புதிய இணக்கப்பாட்டை எட்டுவோம் - என்றார். (ச-இ)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 25.01.1962 உதிர்வு 06.11.2023

## இராமலிங்கம் செல்வநாதன்

(திதி : அபரபட்ச நவமி 25.10.2024)


ஆண்டு ஒன்றாகி விட்டாலும்
ஆறிடுமோ எம் நெஞ்சம்
கடல் கடந்து வெகுதூரம் வாழ்ந்தபோதும்
உன் நினைவாக இருந்தோம்
இறவாமல் இருப்பதொன்றும்
சாத்தியமில்லைதான்
ஆனால் உன் நெடுந்தூர வாழ்க்கைப் பயணம்
பாதிவழியில் விலகியது ஏனோ
பாசமான உன் உருவம் நீறாகி போனதென்று
நினைக்க மனம் முடியவில்லை
என்றும் எம் நினைவில் நீங்காது நிலைத்திருப்பாய்
ஓம்சாந்தி ! ஓம்சாந்தி !! ஓம்சாந்தி !!!

**"கலா பவனம்"
மார்ட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.**

**நீங்கா நினைவுகளுடன்
சகோதர சகோதரிகள்**

(CS/56510) J-1

# மரண அறிவித்தல்



தோற்றம் 15 . 05 . 1963

மறைவு 24 . 10 . 2024

## செல்லத்துரை மகேந்திரன்

**(மகேந்திரம் சைக்கிள் கடை)**

வடலியடைப்பை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகேந்திரன் (மகேந்திரம் சைக்கிள் கடை) நேற்று (24.10.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் மகனும், புஸ்பராணி, தனலட்சுமி, குலேந்திரராஜா ( குலம்), புலேந்திரன் ( ராசா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும். துரைராசா, சபீசா (ஆசிரியர் - வடலியடைப்பு சைவப்பிரகாச வித்தியாசாலை), யுமாலியா , ஆகியோரின் மைத்துனரும், லோஜிப்பிரியா ( ஆசிரியர் - கண்டி புசலாவ இந்து தேசியக் கல்லூரி) கோபிகா (இந்தியா), தர்மிகா (மாநகர சபை - யாழ்ப்பாணம்), பூர்வஜா (பிரான்ஸ்), தர்மிலன், சங்கீர்த்தன் (நீதிமன்றம் - கிளிநொச்சி), மிதுனன், அபிஷன் ஆகியோரின் பாசமிகு பெரிய தந்தையும், துவாரகன், ஹாசன் ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் இன்று (25.10.2024) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி வீதி,
வடலியடைப்பு.**

(CS/56528) J-1

**தகவல் :
மருமகன் - துவாரகன்**
076 120 3645

# மரண அறிவித்தல்

## யேசுதாசன் கோபிராஜ்



இராஜசிங்கம் வீதி, திருநகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யேசுதாசன் கோபிராஜ் நேற்று முன்தினம் (23.10.2024) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.10.2024) வெள்ளிக்கிழமை பி.ப. 3.30 மணியளவில் புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மலர்வு 06.05.1983 உதிர்வு 23.10.2024

**தகவல்:
குடும்பத்தினர்
(உதயா)**

(CS 29047) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

**வாகனம் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரல்**
(Quotation for vehicle hiring on contract basis )

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது ஐக்கிய ராச்சியத்தைத் தளமாகக் கொண்ட உலகின் மிகப்பெரிய சர்வதேச மனிதாபிமான கண்ணிவெடி அகற்றும் அரசசார்பற்ற நிறுவனமாகும் உலகளாவியரீதியில் 30 ஆண்டுகளுக்கு மேலாக நாங்கள் உயிரைக் காப்பாற்றி வருகிறோம். போரினால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் நிலத்தைப் பாதுகாப்பாக மீட்டெடுக்க உதவுகிறோம். மோதலில் பாதிக்கப்பட்டவர்களின் உயிர்களைப் பாதுகாப்பதும் வாழ்வாதாரத்தை மீட்டெடுப்பதும் எங்கள் நோக்கம்

ஹலோ ட்றஸ்டின் எதிர்கால நடவடிக்கைகளுக்காக ஆபத்துகளின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதற்கு வாகனம் குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

சாரதி மற்றும் எரிபொருள் இல்லாமல் பின்வரும் விபரங்களுடன் 31 ஒக்டோபர் 2024 வியாழக்கிழமை அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ விண்ணப்பித்தல் வேண்டும்.

- வாகனம் வெள்ளை நிறமாக இருக்க வேண்டும். மேலதிக ஸ்டிக்கர்கள் அல்லது தேவையற்ற அடையாளங்கள் எதுவும் இருக்கக்கூடாது.
- பின் இருக்கைகள் அகற்றப்பட்டு முன் இருக்கைகள் மட்டுமே இருக்க வேண்டும்.
- முழுக் காப்புறுதி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- வாகனத்தில் ஸ்ரெச்சரைப் பொருத்துவதற்கு எமக்கு அனுமதி வழங்க வேண்டும்.
- சைரன்கள் மற்றும் பீக்கான் விளக்குகளைப் பொருத்துவதறகான அனுமதியினையும் எமக்கு வழங்க வேண்டும்.
- வாகனத்தை உரிய நேரத்தில் பராமரிப்பு வேலைகள் செய்வதனை உரிமையாளர் உறுதிப்படுத்த வேண்டும்.
- விபத்து ஏற்பட்டால் காப்பீட்டு கோரிக்கை மூலம் பழுது பார்க்கப்பட வேண்டும்.
- கூலிக்கு அமர்த்தும் காலம் கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் மிதிவெடி அகற்றல் செயற்பாடு முடிவடைவதனைப் பொறுத்து நீடிக்கப்படும்.
- வாகனப்பதிவு இலக்கங்கள் ஆங்கிலத்தில் இருப்பது விரும்பத்தக்கது.

மனிதவள முகாமையாளர்
த ஹலோ ட்றஸ்ற் - இலங்கை
450,திருநகர் மேற்கு, கிளிநொச்சி.

(CR/43471) J-1

# வீடு வாடகைக்கு உண்டு

கொக்குவிலுக்கு அண்மையில் அமைந்துள்ள பெரிய வீடு களஞ்சியமாகவும் பாவித்து சிறு குடும்பம் ஒன்றும் தங்கக்கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

**077 217 8921, 075 728 1891**

(CS/56524) J-1

## பெறுகைக்கானஅழைப்பு

**உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை வழங்கல்**

**மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்**

NP/20/FB/PROC/FOOD/2024

மாகாணக்கல்வித் திணைக்களத்தால் 15.11.2024 - 15.11.2025 வரையான காலப்பகுதிக்கு செயலமர்வுகள் மற்றும் நிகழ்வுகளிற்கு உணவு குடிபானம் மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்வதற்காக திணைக்களப் பெறுகைக்குழு (பெரியது) முத்திரையிடப்பட்ட பெறுகைகளினை கோருகின்றது.

1. பெறுகைகள் அனைத்தும் தேசிய விலைக்கேள்வி அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.
2. மீளளிக்கப்படாத பெறுகைக் கட்டணம் : ரூபா 1000.00
3. பெறுகைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் காலப்பகுதி: அலுவலக நாட்களில் 25.10.2024 தொடக்கம் 08.11.2024 வரையான காலப்பகுதியில் 9.00 மணிதொடக்கம் 15.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்
4. விலைக்கேள்விகள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய திகதியும் இடமும் : 11.11.2024 திகதி 10.00 மணிக்கு முன்பதாக வடமாகாணக் கல்வித் திணைக்கள பிரதம கணக்காளர் அறையில் பேணப்படும் பெறுகைகள் பெட்டியில் சேர்ப்பிக்கப்படல் வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட விலைக் கேள்விகள் கேள்வி நேரமுடிவில் விலைக் கேள்வியாளர்கள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும்.

**தலைவர்**
**மாகாணக் கல்விப் பணிப்பாளர்**
**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**திணைக்கள பெறுகைகள் குழு (பெரிது).**

(CR/43470) J-1

# முதலாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு
29 . 07 . 1942

உதிர்வு
07 . 11 . 2023

**அமரர் கந்தையா சுப்பிரமணியம்**
(காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபனத்தின் ஓய்வு பெற்ற ஊழியர்)
திதி : நவமி

தன்னலமும் கொண்டிடாமல்
தன்வயமாய் எமைப்பாதுகாத்துப்
பன்னலுடன் பக்குவமாய்
பிரியமுடன் நோக்கிநின்றீர்.
என்னகடன் செய்தோமென்று
ஏற்புடனே அணைப்பவராய்,
மின்னலைச் சென்ற நீரும்
மீண்டுவரக் காத்திருக்கோம்.

தருவதுவாய் நீரிலங்கித்
தண்மையுடன் எமையேற்றுக்
குருவினனாய்ப் போதித்துக்
குரவதமாய்க் கதைபகன்று
அருங்கலைகள் புகட்டி நின்ற
ஆதவனாம் உமைக்காண
மனமொன்ற அனுதினமும்
மனமேங்கக் காத்திருக்கோம்

சாயுடை வீதி,
மாவிட்டபுரம்

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள் மற்றும் பேரப்பிள்ளைகள்

(CS/56521) J-1

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



**கடந்த 25.09.2024 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த**
**எங்கள் குடும்பத் தலைவர்**

**அமரர் இராமலிங்கம் குமாரசாமி**

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (25.10.2024) வெள்ளிக் கிழமை காலை 7.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிருத்தியக் கிரியைகள் நடைபெற்று நாளை மறுதினம் (27.10.2024) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் "உரும்பிராய் காளிகோவில் காமாட்சி மண்டபத்தில்" ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதியபோசன நிகழ்வும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து சிறப்பிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

கடந்த 25.09.2024 புதன்கிழமை அன்று எமது குடும்பத் தலைவர் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரில் வந்தும், தொலைபேசி, சமூக ஊடகங்கள் ஊடாக ஆறுதல் கூறி அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பதாகைகள்,. மலர்வளையங்கள் மற்றும் துண்டுப்பிரசுரங்கள் ஊடாக எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு

**இவ் அழைப்பினை தனி நபர் அழைப்பாக ஏற்றுக்கொண்டு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

பலாலி வீதி,
உரும்பிராய்.

**குடும்பத்தினர்**

(CS/1680) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு பரவும் சூழலுடன் கிளிநொச்சி பஸ் தரிப்பிடம்

## பயணிகள் விசனம்

**கிளிநொச்சி, ஒக்.25**

**வடக்கு மாகாணத்தின் மத்தியில் காணப்படும் கிளிநொச்சி பொது பேருந்துத் தரிப்பிடம் மழை நீர் தேங்கி டெங்கு நுளம்புகள் பெருகும் ஆபத்தான இடமாகக் காணப்படுவதுடன் அசுத்தமாகவும் உள்ளது என்று பயணிகள் விசனம் தெரிவித்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,



தரிப்பிடத்தில் பல இடங்கள் மாசுபடிந்த நிலையில் காணப்படுவதோடு ஆங்காங்கே பிளாஸ்ரிக் போத்தல்கள் வீசப்பட்டு நீர் தேங்கிக் காணப்படுகின்றன.

தரிப்பிடத்தின் மலசலகூடத்தின் கழிவுநீர் பயணிகள் பாவனையில் உள்ள இடங்களுக்கு வெளியேற்றப்படுகிறது. இதனால் துர்நாற்றம் வீசுவதோடு தரிப்பிடத்துக்கு வரும் பயணிகளுக்கு நோய்த்தாக்கங்கள் ஏற்படக்கூடிய அபாயநிலையும் காணப்படுகிறது.

தென்பகுதி மற்றும் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து நாளாந்தம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகள் இந்த பேருந்துத் தரிப்பிடத்தைப் பயன்படுத்துகின்றனர்.

எனவே பேருந்து நிலையத்தை சுத்தமாகப் பேணுவடன் டெங்கு பெருக்கத்தையும் கட்டுப்படுத்தவும் உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பயணிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-113)



## சான்றிதழ் வழங்கல்

கிளிநொச்சி, ஒக்.25

200 மணித்தியாலங்கள் இரண்டாம் மொழி சிங்கள மொழி கற்கைநெறியை நிறைவு செய்த 62 மருத்துவர்களுக்கான பயிற்சி நிறைவு நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதனும், சிறப்பு விருந்தினர்களாக தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிலையத்தின் உதவிப்பணிப்பாளர் தயான் சம்பத் பொத்துப்பிட்டிய, கிளிநொச்சி மத்திய கல்லூரி பிரதி முதல்வர், மாவட்ட செயலக மொழி விரிவாக்க உத்தியோகத்தர், விரிவுரையாளர்கள் கலந்துகொண்டனர். (எ-ரி-113)



## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஒக்.25

வடமராட்சி, கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியின் பரிசளிப்பு விழா பாடசாலை அதிபர் அரவிந்தன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். போதனா மருத்துவமனை நரம்பியல் சத்திர சிகிச்சை நிபுணர் எஸ்.ஆதித்தனும், சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை நகரசபை அபிவிருத்தி உத்தியோகத்தரும், பழைய மாணவர் சங்கத் தலைவருமான இளையதம்பி சேந்தன், யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை முன்னாள் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக உயிரியல் இராசாயனத் துறை பேராசிரியர் திருமதி லோகினி ஆதித்தன் ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ-25,27)




## சிலம்பப் பயிற்சி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஒக்.25

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவால் பிரதேச அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான சிலம்பப் பயிற்சிச் செயலமர்வு வடலியடைப்பு ஐயனார் ஆலய வளாகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்தப் பயிற்சிச் செயலமர்வில் சிவலீமன் தற்காப்புக் கலை மன்ற நிறுவுநர் சூ.யசோதரன் வளவாளராகக் கலந்து கொண்டு பயிற்சிகளை வழங்கினார். (எ-45-66)



## மரநடுகை

யாழ்ப்பாணம், ஒக்.25


யாழ். போதனா மருத்துவமனையின் கண் சிகிச்சைப்பிரிவு அமைப்பதற்காக யாழ்.கண்டி வீதி, அரியாலையில் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள காணியில் யாழ். போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மரநடுகை நிகழ்வு நடைபெற்றது.

நிகழ்வில் யாழ். போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி சி.யமுனானந்தா, கண் மருத்துவ நிபுணர் மலரவன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். (எ-25,66)

## அடிக்கல் நடுகை

மன்னார், ஒக்.25

மன்னார் பிரதான பாலத்துக்கு அருகில் நீண்டகாலமாக இராணுவ சோதனைச் சாவடி அமைந்து காணப்பட்ட பகுதியில் கடற்கரை பூங்கா அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு மன்னார் நகரசபை செயலாளர் தலைமையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. நிகழ்வில் மன்னார் மாவட்டச் செயலர், பிரதேச செயலாளர்கள், நகரசபை செயலாளர்கள், நகரசபை ஊழியர்கள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள் உள்ளடங்கலாக பலர் கலந்துகொண்டனர். (எ-25,56)





## உளவளக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.25

வலிகாமம் தெற்குப் பிரதேசசபையின் உத்தியோகத்தர்களுக்கான உளவளக் கருத்தரங்கு சுன்னாகத்திலுள்ள சபையின் தலைமையகப் பிரதான மண்டபத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

கருத்தரங்கில் யாழ்.போதனா மருத்துவமனையின் உளவள ஆலோசகர் நா.நவராஜ் வளவாளராகக் கலந்து கொண்டார். (எ-25,66)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பயங்கரவாதத்தை...

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இலங்கைக்கு வருகைதந்துள்ள வெளிநாட்டு பயணிகளுக்குப் பாதுகாப்பு ரீதியிலான அச்சுறுத்தல் ஏற்படக்கூடும் என்று எமது புலனாய்வுப் பிரிவுக்குத் தகவல் கிடைத்துள்ளது. அவ்வாறு உளவுத் தகவல் கிடைத்த கையோடு உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து ஒரு மாதமாகின்றது. இந்தக் காலப்பகுதிக்குள் பல தடவைகள் பாதுகாப்புச்சபை கூடியுள்ளது. முதலாவது, இரண்டாவது தேசிய சபைக் கூட்டத்தின்போதே புலனாய்வுப் பிரிவுகளால் இந்தத் தகவல்கள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகம் பயணிக்கக்கூடிய அறுகம்குடா, பண்டாரவளை எல்ல பகுதி, மாத்தறை வெலிகம பகுதி உள்ளிட்ட கரையோரப் பகுதிகளுக்கு இம்மாதம் ஆரம்பம் முதல் விசேட பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டது. பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் இவ்விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஒக்ரோபர் 22 ஆம் திகதியும் பாதுகாப்பு சபை கூடியது. ஜனாதிபதி, பிரதமர், நான் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர், விசாரணை நடத்தும் தரப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டோம். அன்றிரவு முதல் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்டன. நேற்று (நேற்றுமுன்தினம்) விசேட பாதுகாப்பு சபைக் கூட்டம் நடைபெற்றது. இதன்போது முக்கியமான முடிவுகள் எடுக்கப்பட்டன. முப்படையினரும் ஆரம்பம்முதலே விசேட பாதுகாப்புநடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுவருகின்றனர்.

குறிப்பாக இஸ்ரேலியர்கள் இலக்குவைக்கப்படலாம் என தகவல் வெளியானது. எனவே, இஸ்ரேலியர்கள் கூடும் இடங்களிலும் உரிய பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக தேவையான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனவே, எவரும்வீண் அச்சம்கொள்ள வேண்டியதில்லை. நாட்டுக்குள் சுதந்திரமாக நடமாடலாம்" - என்றார். (அ-ம-44)

## மீட்பதாகத்...

தேசிய அமைப்பாளரான நாமல் ராஜபக்ச, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்று முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார். இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே நாமல் ராஜபக்ச இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"ஆட்சி மாற்றம் இடம்பெற்ற பின்னர், முன்னாள் ஆட்சியில் இருந்தவர்களை அழைத்து விசாரிக்கும் நடைமுறை தொடர்கின்றது. இது தேர்தல் காலம் என்றபோதிலும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கிலேயே வருகை தந்திருந்தேன். எம்மைப் பற்றி மக்கள் மத்தியில் பொய்களைக்கூறி தவறான விம்பத்தை தோற்றுவித்துள்ளனர். நீதிமன்றம் மூலம் மட்டுமே நாம் குற்றவாளிகள் அல்லர் என்பது நிரூபிக்கப்படும். அதனால்தான் விசாரணைகளுக்கு அழைக்கப்படும்போது வருகை தருகின்றோம்.

2010 - 2015 காலப்பகுதியில் எனது அலுவலகத்துக்கு வந்து, பணம் வைக்கப்பட்டுள்ளதாக நபரொருவர் கூறியுள்ளாராம். அது பற்றி விசாரிக்கவே இன்று (நேற்று) அழைக்கப்பட்டிருந்தேன். இது அநாமதேய முறைப்பாடாகும்.

நல்லாட்சிக் காலத்திலும் இப்படிதான் விசாரணைகள் நடந்தன. இறுதியில் குற்றமற்றவர்களென நிரூபணமானது. இதேபோல உகண்டா மற்றும் சீசெல்ஸில் பதுக்கப்பட்டுள்ளதாகச் சொல்லப்படும் கறுப்புப் பணம் தொடர்பிலும் விசாரணை நடத்துங்கள். மக்களுக்கு வழங்கியுள்ள வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல்போகும்போது அரசியல் பழிவாங்கல்களை ஆரம்பிக்கக்கூடாது. நாம் குற்றமற்றவர்கள். எதற்கும் தயார்" - என்றார். (அ-ம-44)

## பயங்கரவாத...

குற்றச்சாட்டில் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விடயத்தில் மூவர் கைது செய்யப்பட்டதையும், அவர்கள் அனைவருமே இலங்கையர்கள் என்பதையும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விஜித ஹேரத் உறுதிப்படுத்தியுள்ளார். சந்தேகநபர்களிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (அ-ம-44)

## கம்மன்பிலவின்...

குற்றஞ்சாட்டியுள்ளது. இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுத்தேர்தல் வேட்பாளரான காவிந்த ஜயவர்தன தெரிவித்ததாவது:-

"உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகளைத் திசை திருப்பக்கூடாது. அவை வெளிப்படைதன்மையுடன் இடம்பெறவேண்டும். இந்த விடயத்தில் கத்தோலிக்க திருச்சபை நிற்கும் பக்கமே நாமும் நிற்போம். பேராயரை விமர்சிப்பதற்கு உதய கம்மன்பிலவுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்குவதற்கே கம்மன்பில தரப்பு முயற்சிக்கின்றது. மலட்டுக் கொத்து, மலட்டு மார்புக் கச்சை உள்ளிட் விடயங்கள் தொடர்பில் இவர்களே பிரசாரம் முன்னெடுத்தனர். தேர்தல்நெருங்கும்வேளை, அரசியல் இலாபம் தேடும் நோக்கிலேயே கம்மன்பில அறிக்கையை வெளியிட்டிருக்கக்கூடும் - என்றார். (அ-ம-44)

## தமிழக...

வலியுறுத்தியுள்ளார். தமிழக மீனவர்களின் விடுதலையை வலியுறுத்தி, இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். அந்தக் கடிதத்திலேயே, தமிழக மீனவர்களை எந்த நிபந்தனையும் இல்லாமல் மீட்கவேண்டும் என்றும், தமிழக மீனவர்களின் படகுகள் அந்தந்த மீனவர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் ஸ்டாலின் கூறியுள்ளார்.

இராமேஸ்வரம் பகுதியைச் சேர்ந்த 16 மீனவர்கள் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கைக்காக இலங்கைக் கடற்படையால் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்தே ஸ்டாலின் தமிழக மீனவர்களின் விடுதலை தொடர்பில் வலியுறுத்தியுள்ளார்.

தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், பொருளாதாரத்தையும் இலங்கை அரசாங்கமும் இலங்கைக் கடற்படையும் திட்டமிட்டு நாசம்செய்து வருகின்றன என்றும் தமிழக முதல்வர் ஸ்டாலின் குற்றஞ்சாட்டியுள்ளார். (அ-ம-இ)

## மன்னாரில்...

ஏற்பட்டுள்ளது. மன்னார் மற்றும் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுகளிலேயே கூடுதலான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன என்றும், வெள்ள இடரால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 898 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் மூன்று இடைத் தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

பாதிப்படைந்த மக்களுக்கு மன்னார் மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு, பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம அலுவலர்கள் ஊடாக நிவாரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. (அ-ம-60)

## பரப்புரைகளை ...

தமிழ் மக்கள் கூட்டணியின் பொதுத்தேர்தல் வேட்பாளர் பார்த்திபன் கைது செய்யப்பட்டமையானது, அடிப்படை மனித உரிமை மீறல் என்பதுடன், எமது கட்சியின் செயற்பாடுகளை முடக்கும் நடவடிக்கையுமாகும் என்று சட்டத்தரணியும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் முதல்வருமான மணிவண்ணன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பருத்தித்துறை நகர்ப் பகுதியில் வைத்து எமது கட்சியின் பொதுத்தேர்தல் வேட்பாளர் பார்த்திபனும், எமது அணியினரும் கைது செய்யப்பட்டுள்ளனர். எமது பரப்புரைகளைக் குழப்புவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டே இந்தக் கைதுகள் இடம்பெற்றுள்ளன. இதன்பின்னணியில் வேறு கட்சியினரின் சதிச் செயற்பாடுகள் உள்ளனவா? என்ற வலுவான சந்தேகம் எமக்கு உள்ளது. ஆதலால், இதைத் திட்டமிட்ட செயலாகவே நாம் பார்க்கின்றோம் - என்றார்.

தனது கைது தொடர்பில் பார்த்திபன் தெரிவித்ததாவது:-

பொதுத்தேர்தலை முன்னிட்டு தேர்தல் பரப்புரையில் ஈடுபட்டிருந்தபோது, தேர்தல் விதிமீறலில் ஈடுபட்டதாகக் கூறி நாங்கள் கைது செய்யப்பட்டோம். ஆனால், எந்தவொரு தேர்தல் விதிமீறலிலும் நாம் ஈடுபடவில்லை. உண்மையில் சம்பவம் இடம்பெறுவதாக பொலிஸார் குறிப்பிடும் இடத்தில் நான் இருக்கவில்லை. பிறிதொரு இடத்தில் நின்ற என்னை, எனது ஆதரவாளர்கள் மூலம் அழைப்பெடுத்து சம்பவ இடத்துக்கு வரவழைத்தே பொலிஸார் கைது செய்தனர். ஆதலால், எமது கைது திட்டமிட்ட சதிச்செயல் என்பதில் மாற்றுக்கருத்தில்லை - என்றார். (அ-ம-20-26)

## ஆட்சி ...

அநுர அரசாங்கம் வந்தாலும், ஆட்சி மாறினாலும் உண்மையான மாற்றங்கள் வடக்கு - கிழக்கில் நிகழவில்லை என்பதையே எனது கைது காண்பிக்கின்றது என்று நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எந்தவொரு தேர்தல் விதிமீறலிலும் நான் ஈடுபடவில்லை. கடையொன்றுக்குள் சில பொருள்களைக் கொள்வனவு செய்யச் சென்ற வேளையிலேயே கைது செய்யப்பட்டேன். பொலிஸார் போலியான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியே என்னைக் கைது செய்துள்ளனர். எத்தனையோ வேட்பாளர்கள் தமது முகநூல்களிலே தேர்தல் பரப்புரைகளையும் துண்டுப் பிரசுரங்கள் விநியோகிப்பதையும் மேற்கொண்டு வரும் நிலையில், போலியான குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு எங்களை அச்சுறுத்தும் நோக்கம் என்ன என்பதை மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும். ஆட்சிமாற்றம் ஏற்பட்டாலும், அரசியல் செயற்பாடுகளை கைதுகள் மூலம் முடக்கும் நடவடிக்கைகள் தொடர்கின்றன. எந்தவொரு மாற்றமும் வடக்கு - கிழக்கில் ஏற்படவில்லை என்பதே உண்மை - என்றார். (அ-ம-26)

## கஜேந்திரகுமார்...

பொன்னம்பலம் மற்றும் யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் பார்த்திபன் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நெல்லியடிப் பொலிஸாராலும், தமிழ்மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற வேட்பாளரான வரதராஜன் பார்த்திபன் பருத்தித்துறை பொலிஸாராலும் கைது செய்யப்பட்டனர்.

இருவரும் இருவேறு இடங்களில் வைத்து, சட்டத்துக்குப் புறம்பான வகையில் பரப்புரைகளில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்டனர். இருவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டதைத் தொடர்ந்து, கஜேந்திரகுமார் பொன்னம்பலம் நேற்று மாலையும், வரதராஜன் பார்த்திபன் நேற்று இரவும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

பார்திபனுடன் பயணித்த அவருடைய ஆதரவாளர் ஒருவரும் கைது செய்யப்பட்ட நிலையில், அவரிடம் இருந்தும் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. (அ-ம-26)

## இந்துக்...

கடைப்பிடிக்கப்பட்டது. படுகொலை செய்யப்பட்டவர்களை நினைந்து ஒரு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டதுடன் நினைவுச் சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டது. நினைவுரைகளும் இடம்பெற்றன. (அ-ம-66)

## எலிக்...

சிறீகாந்தராசா சிவாஸ்கர் (வயது-34) என்பவரே எலிக் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு நேற்று உயிரிழந்தவராவார்.

காய்ச்சலால் பாதிக்கப்பட்டிருந்த அவர், கடந்த 22ஆம் திகதி சங்கானை ஆதார மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளார். அங்கிருந்து மறுநாள் அதாவது நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றையதினம் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.

எலிக் காய்ச்சல் காரணமாகவே அவர் உயிரிழந்துள்ளார் என்று மருத்துவமனை வட்டாரங்கள் உறுதிப்படுத்தியுள்ளன. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதி காரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக எலிக் காய்ச்சல் தொடர்பான எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்த நிலையில், ஒருவர் உயிரிழந்துள்ளமையான பெரும் அச்சமான நிலையை குடாநாட்டில் தோற்றுவித்துள்ளது. (அ-ம-26)

## கூரிய...

மீட்கப்பட்டுள்ளன. வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே, ஐந்து வாள்கள் உள்ளிட்ட ஏழு கூரிய ஆயுதங்கள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. வன்முறைக் குழுக்களால் இந்த ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்திருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-20-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஷானியையும் ரவியையும் அரசு பாதுகாப்பது ஏன்?

## கம்மன்பில கேள்வி

**கொழும்பு, ஒக். 25**

**அல்விஸ் அறிக்கையில் நிலந்த, பூஜித, தேசபந்து உட்பட 17 பேரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள் ளன. ஆனால் அரசாங்கம் ரவி செனவிரத்ன, ஷானி அபேசேகர ஆகியோரை மாத்திரம் பாதுகாக்க ஏன்முயற்சிக்க வேண்டும்.**

-இவ்வாறு உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் அறிக்கையை வெளி யிட்ட உதய கம்மன்பில கேள்வி யெழுப்பியுள்ளார்.

அல்விஸ் அறிக்கையை ஏற்க முடி யாது என்பதற்கு அரசாங்கம் குறிப் பிடும் காரணம் சிறு பிள்ளைத்தன மானது. இந்தக் குழுவின் தலைவ ராக பதவி வகித்த நீதியரசர் (ஓய்வு நிலை) அல்விஸ் 2006 முதல் 2023 வரையான காலப்பகுதியில் வழங்கிய தீர்ப்புகளை இரத்துச் செய்யமுடியுமா ?

குண்டுத்தாக்குதல் தொடர்பில் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவல் களை ரவி செனவிரத்ன 12 நாட் கள் மூடி மறைத்தது உண்மையா? பொய்யா? என அரசாங்கம் நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டும். என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

# வேட்பாளர்கள் செலவு மக்களின் பார்வைக்கு

ஜனாதிபதித் தேர்தல் போது பிரசாரங்க ளுக்காக வேட்பாளர்கள் செலவு செய்த விவரங்களை அறிந் துகொள்ளும் உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு. அந்தவகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள செலவினங் கள் தொடர்பான விவரங்களைக் காட்சிப்படுத்தும், இடம் மற்றும் திகதி அறிவிக்கப்படும் என்று தேர்தல் கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் போட் டியிட்ட 35 வேட்பாளர்கள் உரிய காலத்தில் பிரசார செல வினங்கள் தொடர்பிலான விவரத் திரட்டை உரிய காலத் தில் சமர்ப்பித்தனர். 3 வேட்பா ளர்கள் தாமதமான நிலை யில் தான் விவரங்களை சமர்ப்பித்தனர். 10 அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசார செல வுகளை சமர்ப்பிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

(ச-இ)

பதிவுகள் ஆரம்பமாகிவிட்டன
அமெரிக்க லொத்தர் இலவச விசா
காத்திருக்காமல் உடனே பதியுங்கள்
2026ல் நீங்களும் அமெரிக்காவில்
18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்
இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்
இந்த வருடம் A/L எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம்
V2 Travels
0768226244

# புதிய கடன்களை அரசு பெறவில்லை

வழமையான செயற்பாடுகளுக்கப்பால் வெளிநாடுகளிடமிருந்தோ அல்லது வேறு நிறுவனங்களிடமிருந்தோ அர சாங்கம் கடன் பெறவில்லை என்று அமைச்சரவைப் பேச்சாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைக் குறிப்பிட்டார்.

புதிதாக எந்தவொரு நாட்டிலிருந்தும் நாங்கள் கடன்பெறவில்லை. திறைசேரிப் பத்திரங்கள் மற்றும் பிணைமுறி கள் காலாவதியாகும்போது புதிதாக பிணைமுறி வெளியிடுவது மத்திய வங்கியில் இடம்பெ றும் வழமையான செயற்பாடாகும்.

அதற்கப்பால் புதிதாக வேறு எங்கிருந்தும் கடன் பெறவில்லை.

திறைசேரியும் இதுதொடர்பில் விளக்கம ளித்திருந்தது. பிணைமுறிகளுக்கான காலம் முடிவுறும்போது புதிய பிணை முறிப் பத்திரங்கள் வெளியிடப்படும். இது ஒரு வட்டச் செயற்பாட்டை போன்று எதிர் காலத்திலும் இடம்பெறும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

(ச-இ)

காணி விற்பனைக்கு
கந்தர்மடச் சந்திக்கும் Hindu Ladies College இற்கும் இடையில்
1 1/4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
➤ வீதியில் இருந்து இரண்டாவது காணி
➤ சுற்று மதில்
➤ குழாய்க் கிணறு
தொடர்புகளுக்கு:-
076 772 5781, 075 068 4622
(CS 29046) J-1

பணியாளர் தேவை
சைவ உணவகம் ஒன்றிற்கு சமையலாளர், உணவு பரிமாறுனர், உதவியாளர் தேவை.
தொடர்பு: 072 576 5097

# குடும்பத்தலைவர் திடீர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 25

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த குடும் பத்தலைவர் ஒருவர், திடீர் சுகவீனமுற்று நேற்று உயிரிழந்துள்ளார். சிவநேஸ்வ ரன் சிறீதாஸ் (வயது 26) என்ற குடும் பத்தலைவரே இவ் வாறு உயிரிழந்தவ ராவார்.

கடந்த 22ஆம் திகதி காலை திடீர் சுகவீனமடைந்த அவர், மந்திகை மருத்துவமனைக் குக் கொண்டுசெல் லப்பட்டு பின்னர், யாழ்ப்பாணம் போதனா மருத்து வமனைக்கு மாற் றப்பட்டுள்ளார். அவர் சிகிச்சையின் போது நேற்று உயி ரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணை களை யாழ்ப்பா ணம் போதனா மருத்துவமனை யின் திடீர் இறப்பு விசாரணை அதி காரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

தன்னுடைய கணவன் உயிரி ழந்த செய்தியைக் கேள்வியுள்ள மனைவி தவறான முடிவெடுத்து உயிரி ழக்க முற்பட்ட நிலையில், அவர் காப்பற் றப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

(ம-26)

வீடு வாடகைக்கு (ANNEX)
பருத்தித்துறை வீதி, நல்லூர் கந்தசாமி கோயிலுக்கு அண்மையில் இரண்டு அறை, தனி சமையல் அறை, மலசல கூடம், குளியலறை ஆகியவற்றுடன் கூடிய பகுதி வீடு (Annex) மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வாடகைக்கு உண்டு.
அரச/தனியார் உத்தியோகத்தர் குடும்பம் விரும்பத்தக்கது.
077 728 3692
(CS 56522) J-1

வேலை வாய்ப்பு
கிளிநொச்சியில் இயங்கும் நிறுவனத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு ஆட்கள் தேவை
கிளிநொச்சி மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு உணவு தங்குமிடம் வழங்கப்படும்.
1) விற்பனை பிரதிநிதி :-கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் (ஆண்)
2) அலுவலக முகாமையாளர்:-கணினி அறிவுடையவர்கள் (ஆண்,பெண்)
3) விற்பனையாளர்கள் :- ஆண்,பெண்
4) கணக்குப் பதிவாளர் :- ஆண்,பெண் (கணினி அறிவுடையவர்கள்)
மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தகுதி வாய்ந்தவர்கள் கீழ் குறிப்பிடப்படும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்களிடம் உள்ள தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்
1. சுயவிபரக் கோவை
2. குடும்ப பங்கீட்டு அட்டை
3. பிறப்புச் சான்றிதழ்
4. தேசிய அடையாள அட்டை
5. G.S குணநல சான்றிதழ்
(CS 43475) P-1
தொடர்பு: 077 743 5265

# மரண அறிவித்தல்

தோற்றம் 31 . 03 . 1939



மறைவு 23 . 10 . 2024

## திருமதி கோபாலசிங்கம் சரஸ்வதி

நீர்வேலி வடக்கை பிறப்பிடமாகவும் பொற்பதி வீதி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கோபாலசிங்கம் சரஸ்வதி கடந்த (23.10.2024) புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற கந்தப்பிள்ளை கோபாலசிங்கத்தின் அன்பு மனைவியும், ஜீவா (கனடா), ஜீவநந்தினி (லண்டன்), காலஞ்சென்ற ஜீவசொரூபி (சுவிஸ்), ஜீவசியாமினி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், கல்வி அமைச்சு, வடமாகாணம்) ஆகியோரின் அன்புத்தாயாரும், வரதலட்சுமி (வாசுகி- கனடா), ரஜீந்திரன் (லண்டன்), கிருபாகரமூர்த்தி (சுவிஸ்), லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் சஜீவன், கௌசிகன் (கனடா), றொஷானி, கிருஷான் (லண்டன்), மிதுர்ஷன், ஜதுர்ஷன் (சுவிஸ்), டிலோஷன், பிரியந்தன், ஹாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (28.10.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**இல 34, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்**

**தகவல்:
குடும்பத்தினர்**

(CS 56527) P-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.10. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.